

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்து, அலுவலர்களுக்கு வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 72 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 99 கோடியே 35 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 403 வகுப்பறைகள், 54 கழிவறைகள், 13 ஆய்வகங்கள், 2 குடிநீர் வசதிகள் என 472 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் எஸ்.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.7.2025) முகாம் அலுவலகத்தில், உலகளாவிய தாவூதி போஹ்ரா முஸ்லிம் சமூகத்தின் 53வது தலைவரான திரு. சையத்னா முஃபாத்தல் சைஃபுதீன் மற்றும் நிருவாகிகள் சந்தித்து, உலகம் முழுவதிலுமிருந்து 43,000க்கும் மேற்பட்ட தாவூதி போஹ்ராக்கள் தங்கள் வருடாந்திர மொஹரம் கூட்டத்திற்காக சென்னை, மூர் தெருவிலுள்ள சைஃபீ மசூதியிலும் மற்றும் நகரத்தின் ஒன்பது இடங்களிலும் கூடி, இக்கூட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைத்து உதவிகளையும் நல்கிய தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்தக் கூட்டம் சென்னையில் 50 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது தான் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.7.2025) முகாம் அலுவலகத்தில், சிங்கப்பூர் நாட்டின் உள்துறை அமைச்சரும், தேசிய பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அமைச்சருமான கே.சண்முகம் சந்தித்துப் பேசினார். இந்நிகழ்வின்போது, சென்னையிலுள்ள சிங்கப்பூர் நாட்டு தூதரகத்தின் தூதர் எட்கர் பெங்க் (Thiru Edgar Pang), துணைத் தூதர் திருமதி வைஷ்ணவி வாசுதேவன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், சட்டத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், சட்டத் துறை செயலாளர் எஸ். ஜார்ஜ் அலெக்சாண்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நீர்வளத்துறை அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், சிறப்பு முயற்சிகள் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் பேடி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், நிதித் துறையின் செயல்பா செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நிதி, சுற்றுச்சூழல், மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை' அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளிடம் குறை கேட்பு கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு மனுக்களை பெற்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர்

# என்.சங்கர் - ச.லட்சுமி சங்கர் இல்ல சுயமரியாதை திருமணம் !

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

திருவண்ணாமலை, ஜூலை 13 -

திராவிடத்தின் திருமகன், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் என்.சங்கர் வெம்பாக்கம் மேனாள் ஒன்றியக் குழுத் தலைவர் ச.லட்சுமி சங்கர் ஆகியோரின் புதல்வர் மருத்துவர் எஸ்.



கௌதமன் மருத்துவர் சி. யுவ்ரீ ஆகியோர் சுயமரியாதை திருமணம் நாளை (14.072025 - திங்கள்கிழமை) காலை 9:00 மணியளவில், காஞ்சிபுரம், செவிலிமேட்டில் அமைந்துள்ள சுகுமாரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சருமான எ.வ.வேலு தலைமை ஏற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ஆரணி பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமை வகிக்கிறார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவர் அணி துணை தலைவர் மருத்துவர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஓ.ஜோதி வரவேற்புரை ஆற்றுகிறார்.

மேலும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் மருத்துவர் எம்.கே.கார்த்திகேயன் நன்றி கூறுகிறார்.